13 பிப்ரவரி 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டின் 6 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக சமூக நீதி தினம்**



# எல்லா நேரத்திலும்.... எல்லாவற்றையும் கடவுள் காண்கிறார்!

இன்றைய நற்செய்திப்பகுதியில் இயேசு அவர் தினமும் சந்திக்கும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் உரையாற்றுவதைக் காண்கிறோம். அவ்வாறு உரையாற்றும்போது அவர் தம்முடைய சீடர்களுக்கும் நெருங்கிய திருத்தூதர்களுக்கும் ஒரு சிறப்பான செய்தியைத் தருவதுபோல் தெரிகிறது. பேறுபெற்றோரின் போதனையில் நான்கு ஆசீர்வாதமும் நான்கு எச்சரிக்கைகளையும் முன் வைக்கிறார். கடவுளின் அரசை நோக்கிப் பயணிக்க முயல்பவர்களுக்கும், அதைவிட்டு விலகிச் செல்பவர்களுக்குமான வேறுபட்ட போதனையை முன்வைக்கிறார். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்களுடைய தியாகமும், தன்னலமற்ற வாழ்க்கையும் கடவுளால் கவனிக்கப்படுகிறது என்று நிச்சயமாக ஆறுதல் அடைந்திருப்பார்கள். வாழ்க்கையில் கவலையற்ற எளிதான பாதையில் செல்வோருக்கு அவ்வாறு இல்லை.

தம்மைப் பின்பற்றுபவர்களை அவர் புரிந்துகொண்டதுபோலவே நம் வாழ்க்கையில் என்னென்ன அனுபவிக்கிறோம் என்பதை நம் போதகர் அறிவார். இயேசுவைப் பின்பற்றும் ஆண் பெண்களுக்கு என்ன நிகழும் என்று இயேசு சுட்டிக்காட்டியதை விவிலிய அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். வாழ்க்கையின் மறுபக்கத்தில் உள்ளவற்றைப் பற்றி இயேசு எச்சரிக்கின்றார். அதாவது பணக்காரர், நன்கு உண்டு மகிழ்வோர் ஆகியோர் மகிழ்ச்சியாக இருந்தாலும், இவர்கள் பிறரின் துன்பங்களை மறந்தவர்கள். அவருக்காகத் துன்பப்படுவோரை ஆசீர்வதிக்கும் இறைவன், அதே வேளையில் விண்ணக வாழ்வை விட, இறையாட்சிக்குச் செல்லும் வழிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளாமல், இவ்வுலக செல்வங்களை மதிப்பவர்களுக்கும், அளவுக்கதிகமாக இவ்வுலக வாழ்வைப் பற்றிக்கொள்ளும் அனைவருக்கும் அறிவுறுத்துகிறார்.

அப்போது பேசியதுபோலவே இயேசு இப்போதும் நம்மிடம் பேசுகின்றார். அவமானங்கள், துன்பதுயரங்கள் அனைத்தின் மத்தியில் நாம் சரியானதையும் நீதியானதையும் தான் செய்கிறோம் என்பதை இறைவன் அறிவார். அவர் உன்னுடைய சோகத்தையும், கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீரையும் அறிவார். தங்களை மட்டுமே நம்பி, தங்களுடைய ஆணவத்தாலும், பெருமையாலும் அவரை விட்டு விலகிச் செல்லும் ஒவ்வொருவரையும் இயேசு கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். மக்கள் தங்களுடைய சகோதரர்களை எந்த ஒரு வருத்தமும் குற்றவுணர்வும் இல்லாமல் ஏமாற்றி மிதிக்கும்போது, ஆண்டவர் கவனித்துக்கொண்டிருக்கிறார். **நாம் செய்யும் அனைத்து நன்மை தீமைகளை ஆண்டவர் கணக்கில் வைத்திருக்கிறார்.** மேலும் நமக்கு விண்ணகத்தில் கிடைக்கும் வெகுமதிக்காக நம் தலையை உயர்த்தும்படியும் கேட்கிறார். ✣

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர்;.....

(எரேமியா 17:7)

**இன்றைய வாசகங்கள்:**

எரேமியா 17: 5-8;

திபா: 1: 1-4, 6;

1 கொரி: 15: 12, 16-20;

லூக்கா: 6: 17, 20-26.

INTERNAL CIRCULATION ONLY

BUL 07/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org